DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**SC.No.56 /2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | P.W.9 | | | |
| Name | : | வேணி | Calling | : | |
| Husband Name | : | துரைமுருகன் | Religion | : | |
| Village | : | | Caste | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 18.08.2023

**முதல் விசாரணை:–**

நான் கல்யாணபுரத்தில் குடியிருக்கிறேன். 21.09.2019 அன்று நான் சுமார் மாலை 4.30 மணிக்கு என்னுடைய அப்பாவும் , அண்ணனும் வீட்டில் வீடு கட்டுவது சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் என் அப்பா என் அண்ணனிடம் 5 வருடமாக பாதை பிரச்சினை இருந்துவருவதால் எப்படி வீடு கட்ட முடியும் என்று கேட்டுக்கொண்டிருக்கும் பொழுது அருகில் இருந்த என் சித்தப்பா, சித்தி , அவர்களது மகன் அஜர் எதிரிகள் மூவரும் எங்கட உங்களுக்கு இங்கே பாதை இருக்கு என்று அசிங்கமாக பேசி அங்கு இருந்த விறகு கட்டையை எடுத்து அடித்து அண்ணனையும் , அப்பாவையும் மண்டையை உடைத்திருக்கிறார்கள். பிறகு இரத்தம் ஊத்திய நிலையில் என் அண்ணயையும், அப்பாவையும் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார்கள். பிறகு மேலும் என் அண்ணனையும் , அப்பாவையும் மேல்சிசிக்கைக்காக தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சேர்த்திருக்கிறார்கள். பின்னிட்டு மேல்சிகிச்சைக்காக திருச்சியில் உள்ள நியுரோ ஒன் மருத்துவமனையில் என் அண்ணனை சேர்த்து 03.10.2019 அன்று சிகிச்சைப் பலனின்றி என் அண்ணன் இறந்துவிட்டார் . மறு நாள் என் அண்ணனை சடலக்கூறாய்வு செய்து எடுத்து வந்தார்கள். நான் கல்யாணம் செய்வதற்கு முன்பிருந்தே எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே பாதை பிரச்சினை இருந்து வருகிறது . அண்ணன் இறந்த அன்று நான் என் அம்மா வீட்டில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது . கேள்விப்பட்டுதான் என் அம்மா வீட்டிற்கு வந்தேன். எதிரிகளை சம்மந்தப்படுத்தி நான் கேள்விப்பட்ட விபரங்கள் பொய்யானது என்றாலும் , இறந்தவர் என் அண்ணன் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசாரி விசாரணையில் நான் கேள்விப்பட்ட விசயத்தைதான் செய்தேன்.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**SC.No.56 /2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | P.W.8 | | | |
| Name | : | கருப்பையா | Calling | : | |
| Father Name | : | முருகையா | Religion | : | |
| Village | : | | Caste | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 18.08.2023

**முதல் விசாரணை:–**

நான் கரூர் காகித ஆலையில் பொறியாளராக பணிபுரிகிறேன். 21.09.2019 அன்று நான் வேலையில் 2 முதல்10 மணிக்கு வேலையில் இருந்தபோது எனக்கு மொபைல் போனில் அழைப்பு வந்தது . போனில் பேசிய பெண் என்னுடைய வீட்டில் உள்ளவர்களுக்கும் அருகில் உள்ள சித்தப்பா வீட்டிற்கும் சண்டை நடந்ததாக சொன்னால். நான் விபரம் கேட்ட பொழுது பாதை பிரச்சினை சம்மந்தமாக என்னுடைய அப்பாவும் , அண்ணனும் வீட்டில் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், என்னுடைய அப்பா என் அண்ணனிடம் வீடு கட்டுவது சம்மந்தமாக பாதை பிரச்சினை இருந்ததாக பேசிக்கொண்டிருந்ததாகவும், என் வீட்டிற்கு அருகில் இருந்த என் சித்தப்பா ஆறுமுகமும், ஆறுமுகத்தின் மகன் நீலகண்ட மூர்த்தி ஆறுமுகத்தின் மனைவி பழனியம்மாள் மூவரும் என் வீட்டின் முன்பு நின்று அசிங்கமாக பேசியதாகவும் எதிரிகள் வீட்டிற்கு அருகில் சமைப்பதற்கு போட்டிருந்த கட்டையைஎதிரிகள் மூவரும் எடுத்துக்கொண்டு என் அப்பாவையும் , என் அண்ணயையும் தாக்ககினார்கள் என்றும் அதில் அண்ணனுக்கு மிகவும் பலத்த காயமும் , மண்டை உடைந்தது . அப்பாவிற்கும் தலையில் லேசான காயம் , தோள்பட்டையில் காயம் ஏற்ப ட்டதாகவும் உடனே அருகில் இருந்தவர்கள் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் , அண்ணனுக்கும் அப்பாவுக்கும் முதலுதவி சிகிக்சை செய்ததாகவும் அந்தப் பெண்மனி தகவல் சொன்னார். மேலும் என் அண்ணனையும், அப்பாவையும் மேல்சிசிக்கைக்காக தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கொண்டிருப்பதாக அந்தப் பெண்மணி தகவல் சொன்னார். நான் என்

பணியில் அனுமதி பெற்றுக்கொண்டு தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனைக்கு சென்றேன். கரூரில் இருந்து தஞ்சாவூர் வரும்பொழுது என் அண்ணனுடைய கைபேசியை வைத்திருந்து என் அண்ணிடம் போன் செய்து மேற்கொண்டு விபரம் கேட்டுக்கொண்டேன் . என் அண்ணனுக்கு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து ICU பிரிவில் இருந்ததால் நான் என் அண்ணனை பார்க்க இயலவில்லை . 10 நாட்கள் என் அண்ணன் வினோதகன் மருத்துவமனையில் இருந்தார். மேல்சிகிச்சைக்காக திருச்சியில் உள்ள நியுரோ ஒன் மருத்துவமனையில் என் அண்ணனை சேர்த்து சிகிச்சைப் பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் சரிதான். போலீசார் விசாரித்த பொழுது நான் கேள்விப்பட்ட விசயத்தை தான் சொன்னேன். எனக்கு போன் மூலம் தகவல் சொன்ன பெண்மணி தான் கேள்விப்பட்ட விபரத்தை தான் எனக்கு சொன்னாரா என்றால் சாட்சிமேற்படி சம்பவம் நடந்ததாக என்னிடம் சொன்னார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*